**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ம் நாள் திங்கட்கிழமை

**<u>இ.ம.எண்.21/2026 அதன் அ.வ.எண்.227/2010</u>**

1. முகைதீன் அப்துல் காதர்
2. முபாராக் அலி
3. முகைதீன் மீரா
4. ஆசியா பீவி
5. முகம்மது யாசீன்
6. ஹமீது பாத்திமாள்
7. அபுபக்கர்
8. ஜபருல்லா
9. இஸ்மத் நிஷா
10. ரம்சான் பசீர்
11. மெஹர்பானு
12. முகம்மது அபுபக்கர்
13. அஸ்மா பீவி
14. ஆரிபா
15. மீரான் முகைதீன்
16. அபுபக்கர் சித்திக்
17. ஹயாத்
18. ரம்சான் நூராணி
19. அப்துல் காதர்
20. சம்சுதீன்
21. ராக்கம்மாள்
22. சங்கரம்மாள்
23. பலவேசத்தேவர் (இறப்பு)
24. இஸ்மத்யூனூன்
25. நாச்சியார்
26. ஹிதாய ரசூல்

மேற்படியார்களின் அதிகார பூர்வ
முகவரான இஸ்மத்யுனூன் மூலம்

27. வீரபத்திரன்
28. பாலசுப்பிரமணியன்

... மனுதாரர்கள் / 2 முதல் 6, 9 முதல் 22, 24 முதல் 27, 29, 30, 32, 33 பிரதிவாதிகள்

–எதிர்–

1. பிச்சையா
2. முத்துபாண்டி (இறப்பு)
3. கணபதித்தேவர்
4. சந்தண மாரி
5. சுடலை என்ற சிவா
6. சண்முகவேல்
7. இசக்கி சங்கர் என்ற மணி
8. பேச்சியம்மாள் (இறப்பு)
9. ராமலெட்சுமி
10. மல்லிகா (எ) சங்கரம்மாள்
11. சண்முகத்தாய்
12. முத்துலெட்சுமி
13. சுந்தரம்
14. பேச்சுத்தாய்
15. தங்கவேல்
16. சண்முகத்தாய்
17. இசக்கி (எ) முத்துபாண்டி
மேற்படி இளவரின் பாட்டியும்,
4ம் எதிர்மனுதாரர் சந்தனமாரி அவர்கள் மூலம்
18. சுப்பிரமணியன்
19. சாகுல் ஹமீது
20. மைனர் குல்ஷன் பேகம்
மைனரின் தாயாரும், காப்பாளருமான கதீஜா மூலமாக
21. அருணாசலம்
22. சரஸ்வதி
23. சரஸ்வதி ..... எதிர்மனுதாரர்கள் / வாதிகள்,
1, 7, 8, 23, 31 பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பாக 24.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கிருஷ்ணராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஞானியார் அவர்கள் ஆஜராகியும், 18 முதல் 23 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக உள்ள நிலையில், இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது, அசல் வழக்கில் முன்னரே தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யும் பி.வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 சி.பி.சி.ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுவின் சுருக்கம்

தபசில் சொத்தைப் பொருத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு பதில்வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பதில்வாதுரை தயார் செய்வதற்காக கடந்த 26.03.2026 ம் தேதியன்று நீதிமன்ற வழக்கு கோப்பினை பார்வையிட்ட போது மனுதாரர்கள் தரப்பு கட்சியை நிரூபிக்கக் கூடிய வகையிலான வீரபத்திரதேவர் இறப்பு சான்றிதழ், உச்சினிமாகாளி இறப்பு சான்றிதழ் முறப்பநாடு சார்பதிவாளர் நகல் மற்றும் ராக்கம்மாள், சங்கரம்மாள் ஆகியோர் பிறப்பித்துக் கொடுத்த பொது அதிகார ஆவணம் ஆகியவை ஆவணங்கள் குறியீடு செய்யாமல் விடுபட்டுள்ள விபரம் தெரிய வந்தது. மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பு கட்சியை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் ஆகும். எனவே, மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யும் வகைக்கு மனுதாரர் / பி.வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டியது அவசியம் எனக் கூறி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 4, 6, 7, 9 முதல் 18 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரை மற்றும் கூடுதல் எதிருரை சுருக்கம்**

3.1. மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் குறியீடு செய்ய விடுபட்டு விட்டன என்பதை குறித்தும், அவை இந்த வழக்கின் தீர்வுக்கு எவ்வாறு அவசியமானது என்பது பற்றியும் மனுவில் எதுவும் கூறவில்லை. பிரதான வழக்கில் குறியிட விடப்பட்ட ஆவணங்களை முன்னரே மனுதாரர்கள் தரப்பு சாட்சி விசாரணையின் போது குறியீடு செய்யாததற்கான காரணங்களை மனுதாரர்கள் மனுவில் கூறவில்லை. 2010ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட பிரதான வழக்கில் மனுதாரர்கள் தரப்பு பதில் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் பிரதான வழக்கு விசாரணையை மீண்டும் தாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் பிரதான வழக்கில் இறுதி தீர்ப்பு வழங்கப்பட்டு விடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்துடன் வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனுவை பொருத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் எதுவும் முன்னிறுத்தவில்லை. இரு தரப்பிலும் சான்றாவணம் எதுவும் முன்னிறுத்தவில்லை.

**5. இந்த மனுவை பொருத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் கோரியவாறு அசல் வழக்கில் பி.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

6. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

**<u>தீர்வு :-</u>**

7. மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கானது பதில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரர்கள் பதில்வாதுரைக்காக தயார் செய்ய வழக்கு கோப்பை பார்வையிட்டதில், மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் மனுதாரர்கள் தரப்பு கட்சியை நிரூபிக்கும் வகையிலான வீரபத்திரதேவர் இறப்பு சான்றிதழ், உச்சினிமாகாளி இறப்பு சான்றிதழ் முறப்பநாடு சார்பதிவாளர் நகல் மற்றும் ராக்கம்மாள், சங்கரம்மாள் ஆகியோர் பிறப்பித்துக் கொடுத்த பொது அதிகார ஆவணம் ஆகியவை சான்றாவணங்களாக குறியீடு செய்யாமல் விடுபட்டுள்ள விபரம் தெரிய வந்தது என்றும், எனவே, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யும் பொருட்டு பி.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு கஷ்ட, நஷ்டம் ஏற்படும் எனக் கூறி மனுதாரர்கள் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது.

8. 1, 4, 6, 7, 9 முதல் 18 எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கு 2010ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, 16 வருடங்களாக நிலுவையில் உள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பு பதில் வாதுரைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்கள் அசல் வழக்கின் இறுதிநிலையை எட்டவிடாமல் தடுப்பதற்காக வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கின் தீர்விற்கு எவ்வாறு அவசியமானது என்று கூறவில்லை என்றும், மனு பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என கட்சி செய்யப்பட்டுள்ளது.

9. அசல் வழக்கில் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, தற்போது பிரதிவாதிகள் தரப்பு பதில் வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கினை நிரூபணம் செய்யக் கூடிய வகையிலான வீரபத்திரதேவர் இறப்பு சான்றிதழ், உச்சினிமாகாளி இறப்பு சான்றிதழ் முறப்பநாடு சார்பதிவாளர் நகல் மற்றும் ராக்கம்மாள், சங்கரம்மாள் ஆகியோர் பிறப்பித்துக் கொடுத்த பொது அதிகார ஆவணம் ஆகியவை குறியீடும் செய்யும் பொருட்டு பி.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என மனுாரர்கள் கூறியுள்ள நிலையில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டால் மனுதாரர்களால் அவர்களது தரப்பு வழக்கினை நிரூபிக்க வாய்ப்பு இல்லாமல் போகும் என்பதாலும், மேலும் இந்நீதிமன்றமானது விசாரணை நீதிமன்றம் என்பதால் இங்கு அனைத்து தரப்பினர்களும் அவர்களது பக்கம் உள்ள கட்சியை எடுத்துரைக்க ஆவண சாட்சியங்கள் குறியீடு செய்ய ஒரு வாய்ப்பு வழங்காவிடில் அவர்களுக்கு பாதகங்கள் ஏற்படும் என இந்நீதிமன்றம் கருதுகிறது, அதே வேளையில், அசல் வழக்கானது 2010ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, 16 வருடங்களாக நிலுவையில் உள்ள நிலையிலும், தற்போது மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு பதில் வாதுரைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர்கள் ஏற்படுத்திய காலதாமதத்திற்காக செலவு தொகையுடன் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு சிறந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவின் செலவு தொகையாக ரூ.2000/-ஐ மனுதாரர்கள்,** 1, **4, 6, 7, 9 முதல் 18 எதிர்மனுதாரர்களுக்கு 14.08.2026க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில்**

**இம்மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 14.08.2026.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VENKATACHALAM MONIKA
Orders uploaded on 10.08.2026.
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.08.10 17:54:19 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> – இல்லை**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u>** - இல்லை

VENKATACHALAM MONIKA
Orders uploaded on 10.08.2026.
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.08.10 17:54:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.21/2026 அதன்**

**அ.வ.எண்.227/2010**

சீரான / வரைவு உத்தரவு
10.08.2026.